மாவட்டங்களில் கொண்டுள்ளது. அது மேற்கே திருநின்றவூர் வரை எட்டியுள்ளது. அதற்கு அப்பாற்பட்டுள்ள அரக்கோணம் இதில் இடம் பெறவில்லை.

திருப்பூர் நகரமைப்புத் திட்டம்.

* **448 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் டவுன்-பிளானிங் திட்டம் முறையாக அமுல்படுத்தப்படவில்லை என்று புகார் ஏதேனும் 1967-ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) உறுப்பினர் தமது விண்ணப்பத்தில், "திருப்பூர் நகரமைப்புத் திட்டம் 3-ஐ உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இத் திட்டம் ஏற்கனவே அமுலில் உள்ளது. இத் திட்டத்தில் உத்தேசித் துள்ள சில சாலைகளுக்குத் தேவையான நிலங்கள் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு சாலைகளும் போடப்பட்டு விட்டன. கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள இடங்களில் அமைந்திருக்கும் சிறிய அகலமுள்ள சாலைகளை அகலப்படுத்துவதற்குத் தேவையான நிலங் களை ஆர்ஜிதம் செய்வது பற்றி திருப்பூர் நகர மன்றத்தின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அதற்காக அரசாங்கம் அந்த நில ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னாலே நகரசபையே பொறுப்பேற்று அந்தக் காரியத்தைச் செய்து, நிலத்தை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்று கூறப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நகர மன்றத்திற்கு ஏற்கெனவே ரூ. 76,000 கடன் அளிக்கப்பட்டது. திட்டத்திற்குத் தேவையான நிலங்கள் ரூ. 75,246 செலவில் நகர மன்றமே ஆர்ஜிதம் செய்து இருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் இன்னின்ன பகுதிகள் என்று பிரிக்கப்பட்டு ஆங்காங்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் கீழ் சில சாலைகள் அகலப்படுத்துவதற்கான வேலைகள் எஞ்சியுள்ளன. இந்தச் சாலைகள் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள பகுதியில் உள்ள சிறிய சாலைகளாகும். அச் சாலைகளை அகலப்படுத்து வதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்வது பற்றி திருப்பூர் நகராட்சி மன்றம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதாகக் கூறப் படுகிறது. ஆர்ஜிதம் செய்வதற்காக ஆகும் பெரும் தொகையை, நகராட்சி ஏற்க இயலுமா என்று கோவை மாவட்ட ஆட்சித்

[1971 ஜூலை 26

தலைவர் அறிய விரும்பினார். சாலைகளை அகலப்படுத்த ஏராளமான செலவு ஆகும் என்பதற்காக, திருப்பூர் நகரமன்றம் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று துணை நகரமைப்புத் தலைவர் கூறியுள்ளார். அவர்களுடைய பொருளாதார நிலையைப் பொறுத்து இந்தத் திட்டத்தின் பெரும் பகுதி நிறைவேற்றப்படும். திட்ட நாளாகிய 19—8—1947-லிருந்து இருபதாண்டுக் கால அளவு 19—8—1967 அன்றுடன் முடிவடைந்தது. எனவே, இக்கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று திருப்பூர் நகராட்சி மன்றம் கேட்டுக்கொண்டது. அதற்கேற்ப, பணிகளை முடிப்பதற்கான கால அளவு 1967-லிருந்து மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகையால் இத் திட்டமானது 19—8—1972-க்குள் முழுவதுமாக நிறைவேற்றப் படவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது.

Electrical crematorium for Madras.

449 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to stote—

(a) whether there is any proposal under the consideration of the Government to put up electrical crematorium in Madras City: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சென்னையிலே மக்கள் பெருக்கம் அதிகமாகி விட்டது. மக்கள் உற்பத்தி ஆகிற வேகத்தைப் பார்த்தால் இன்னும் சில நாட்களில் செல்கிற பிணங்கள் க்யூ வரிசையில் நிற்க வேண்டிவரும். அதை ஒட்டி, மின்சாரப் பொறி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதைப் பற்றி நான் அறிந்த வரையில் பிணங்கள் க்யூ வரிசையில் இருக்கும் போது தான் அந்த மின்சார அடுப்பு முழு அளவில் பயன்படும். இல்லையென்றால் மின்சார அடுப்பு முழு சூடு அடைய ஏறத்தாழ சுவிட்சு போட்டதிலிருந்து 6 மணி நேரம் ஆகவேண்டும். அதை அவ்வப்போது அணைக்க இடம் இருக்கக் கூடாது. அவ்வளவு பிணங்கள் இன்று ஒரே இடத்தில் எரிக்கப்படுவது இல்லை. அவ்வளவு பிணங்கள் ஒரே இடத்தில் எரிக்கக்கூடிய சூழ்நிலை, மனப்பான்மை வருகிறபோது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நம் நாட்டின் ஹிந்துக்கள் செத்த பிறகு எலும்புகளை காசி, இராமேஸ்வரத்தில் கொட்டுகிறார்கள். இந்த மின்சார எரிப்பு முறை வந்தால் எலும்புகள் கிடைக்காது என்ற காரணத்தால் இதைப் பலர் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதை மக்களுக்கு விளக்குகிற வகையில் அரசாங்கம் அதன் பயன் குறித்து பிரசாரம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.